# முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## 2013

பொதுத் திறைசேரி

கொழும்பு - 01

தொலைபேசி : 011 -2484757

தொலைநகல : 011-2430270

மின்னஞ்சல் : dgms@msd.treasury.gov.lk

# நோக்கு

அரச துறையின் பதவியணி, சம்பள முகாமை மற்றும் ஆலோசனை தொடர்பான முன்னணி அரச நிறுவனமாகத் திகழ்தல்

# எமது பணி

அரசாங்க சேவையை உன்னத தரத்தில் கொண்டு நடாத்துவதற்கு அவசியமான முகாமைத்துவ உதவிகளை அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குதல்

**பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ......**

அரச துறையின் பல்வேறு துறைகளில் காலத்துக் காலம் எழுகின்ற மனித வளத் தேவைகளையும் நாட்டின் பொருளாதாரத் தேவைகளையும் கவனத்தில் எடுத்து அரசாங்கத் துறையில் போதிய பதவியணி எண்ணிக்கையைப் பேணி வரும் சவால்மிக்க பணிக்கு 2013 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக முகங்கொடுக்க முடிந்தது.

புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் திட்டமிட்டுள்ள துரித பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடையப்பெறும் செயற்பாட்டில் அரசாங்க சேவைகளை வினைத்திறனுடன் வழங்கி அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கும் பொது மக்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் சரியானதும் வினைத்திறன்மிக்கதும் நட்புறவானதுமான சேவையினை வழங்கக்கூடியவாறு அரசாங்க சேவையின் மனித வளங்களை மிகவும் பொருத்தமான முறையிலும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் முகாமை செய்தலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அடிப்படைப் பணிகளாக விளங்குகின்றன. அதற்கிணங்க, 2013 ஆம் ஆண்டு, மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு கூடுதலான பங்களிப்பை வழங்க முடிந்த ஒரு வருடம் என மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள முடியும்.

எமது திணைக்களத்தின் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக உரிய வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய நிதி, திட்டமிடல் அமைச்சினதும் திறைசேரியினதும் செயலாளர் கலாநிதி பீ.பி ஜயசுந்தர அவர்களுக்கும், திறைசேரியின் பிரதிச் செயலாளர்களுக்கும் சகோதரத் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தேவையான சந்தர்ப்பங்களில் உரிய அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஒத்துழைத்த தேசிய சம்பள, பதவியணி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கும் முக்கியமான பணிகளில் ஒத்துழைத்த நிதி ஆணைக்குழு மற்றும் ஏனைய நிரல் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் குழு உணர்வுடனும் ஒத்துழைப்பு மனப்பான்மையுடனும் திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றிய ஊழியர் குழாத்துக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என். கொடகந்த
பணிப்பாளர் நாயகம்

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | பதவியணி முகாமை | 3 |
| 3. | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமை | 10 |
| 4. | ஆய்வுச் செயற்பாடுகள், தகவல் மற்றும் தரவுத் தொகுதி | 11 |
| 5. | தாபனப் பிரிவு | 14 |
| 6. | நிதிப் பிரிவு | 23 |


அட்டவணை


| | | |
|---|---|---|
| I. | நிர்வாகக் கட்டமைப்பு | 25 |

# 1. அறிமுகம்

## 1.1 ஆரம்பம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது, நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் முதல் தரத்திலான ஒரு திணைக்களமாக 1999 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அன்று முதல் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டங்களில் அரச துறையின் ஊழியர் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவன மட்டத்தில் அவசியமான பதவியணியினை இனங்காணுதல், அவ்வாறு இனங்காணப்படும் பதவிகளுக்கான சம்பளங்களைத் தீர்மானித்தல், ஆட்சேர்ப்பு/ தரமுயர்வு நடைமுறைகளுக்கு அனுமதி வழங்குதல் போன்ற செயற்பாடுளின் ஊடாக அரச துறையின் மனித வளங்களை முகாமைசெய்வதற்கு இத்திணைக்களம் உச்ச அளவில் பங்களிப்பு வழங்கியுள்ளது. இதன் போது நாட்டின் நிதி நிலைமை, அபிவிருத்திக்கான ஆற்றல், திறமைமிக்க அரச சேவையொன்றை உருவாக்குதல் என்பன தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது அவசியமாகக் காணப்பட்டது. இதற்காக, தேவையைப் பொறுத்து, உரிய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பதவியணி மீளாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அரச துறைக்கு அவசியமான சிறந்த மனித வளங்களைப் பேணி வருவதற்கு திணைக்களம் பாரியதொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

## 1.2 குறிக்கோள்கள்

இத்திணைக்களமானது மிகவும் பயன்வாய்ந்த மனித வளம் ஒன்றினை அரசதுறையில் உருவாக்கும் பொருட்டு பல்வேறு குறிக்கோள்களுடன் செயற்பட்டு வருகின்றது.

i. அரச துறையின் பதவியணி முகாமை

ii. தேசிய சம்பளக் கொள்கைகளின் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல்.

iii. அரச துறையின் பதவியணி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

## 1.3 வகிபாகம்

i. தேசிய சம்பள ஆணைக்குழுவுக்கு/முக்கிய நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குதல்

ii. அரச துறையில் மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துதல், நடைமுறைப்படுத்துதல், அவை தொடர்பான ஆய்வுகளை நடாத்துதல்.

iii. செயற்பணி, குறிக்கோள், முறைமை, ஒழுங்குவிதிகள் மற்றும் பதவியணி திட்டமிடல் என்பன பற்றிய நிறுவனரீதியான மீளாய்வுகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சிபாரிசுகளை வழங்குதல்.

iv. அரச நிறுவனங்களை மீள்கட்டமைத்தல் மற்றும் உரிய அளவிற்கு ஒழுங்கமைத்தல் என்பவற்றினை நோக்காகக் கொண்டு அரசதுறை நிறுவனங்களின் இரட்டை பணிகளை (Duplicating ) இனங்காணல்.

v. அரசதுறையின் வினைத்திறன் மற்றும் பயன்வாய்ந்த தன்மை என்பவற்றினை உறுதி செய்யும் நோக்கினை முதன்மைப்படுத்தி அமைப்பு ரீதியான மற்றும் பதவியணி மீளாய்வினை மேற்கொள்ளல், திட்ட முறைமைகளை மேம்படுத்தல், நிறுவனக் கட்டமைப்புக்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் பலப்படுத்தல்.

vi. பதவியணித் தேவைப்பாடுகள் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகளையும் தரநியமங்களையும் உருவாக்குதல்

vii. மேலதிக பதவியணியை இனங்காணல், அவர்களை மீளப் பொருத்தமான முறையில் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் சேவை ஒழிப்பு முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

viii. பௌதீக சூழலை மேம்படுத்த வேண்டியதன் தேவைகள், இயந்திரமயப்படுத்தல்/ கணனிமயப்படுத்தல் மற்றும் சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் என்பன தொடர்பான துறைகளை இனங்காணல்.

ix. அபிவிருத்தித் தேவைகளுக்கு பொருத்தமானவாறு சேவை பிரமாணக் குறிப்புக்கள், சேவை நிபந்தனைகள் பற்றிய மீளாய்வுகளில் ஈடுபடல் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

x. அரசதுறையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீளப் பணிக்கமர்த்துதல், ஆலோசகர்களை பயன்படுத்தல் என்பன தொடர்பான முன்மொழிவுகளை ஆராய்ந்து பார்த்து சிபாரிசுகளை சமர்ப்பித்தல்.

xi. அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவை என்பவற்றின் பதவியணி பற்றிய தகவல் முறைமையினை பேணிவருதல் மற்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளுக்கு பதிலீட்டினைத் திட்டமிடல்.

xii. ஆட்சேர்ப்புக் கொள்கைகள், திறமைகள், அபிவிருத்திப் பயிற்சி மற்றும் பதிலீட்டுத் திட்டங்கள் என்பன தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்துவதில் உரிய அதிகாரிகளுக்கு ஒத்துழைத்தல்.

xiii. அரச துறையினரின் சம்பளம் மற்றும் பணிக்கொடை, ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், நலன்புரி திட்டங்கள் மற்றும் அதனையொத்த ஊதிய இணைப்புக்கள் தொடர்பான முகாமைத்துவம்.

xiv. மாகாண சபைகள் மற்றும் மாகாண சபை நிறுவனங்களின் நிறுவனசார் மீளாய்வுகளை மேற்கொள்ளுதலும் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம் பற்றிய ஆலோசனை சேவைகளை வழங்குதலும்.

xv. அரசாங்க மற்றும் கூட்டுத்தாபனத் துறைகளில் முதியோருக்கு நன்மையளிக்கும் திட்டங்கள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடல்.

# 2. பதவியணி முகாமை

அரச துறையின் மனித வளங்களை முகாமை செய்வதில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வகிபாகமானது, பின்வரும் முக்கியமான செயற்பாடுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

- புதிய பதவிகளை உருவாக்குதல்
- பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல்
- பதவிகளை இல்லாதொழித்தல்
- பதவிப் பெயர்களை திருத்துதல்
- செயற்திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைப் பதவியணிகளுக்கு அனுமதி வழங்கலும் சம்பளங்களைத் தீர்மானித்தலும்

அரச துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான அளவு ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வர வேண்டியுள்ளது. அதனடிப்படையில், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க தொழில்முயற்சிகள் என்பவற்றில் காலத்துக் காலம் எழுகின்ற மனித வளத் தேவைகளையும் நாட்டின் பொருளாதார இலக்குகளையும் கவனத்தில் எடுத்து நிறுவனங்களில் போதியளவு ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவதற்கான தனது பணிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது.

## 2.1 அரச துறை ஊழியர் படையும் துறைசார் கட்டமைப்பும்

2013.12.31 ஆந் திகதியில், தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் மொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை 1,298,529 ஆகக் காணப்பட்டது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அரசாங்கத் தொழில் முயற்சிகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரைக் கொண்ட அரச துறையின் ஊழியர் கட்டமைப்பானது தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டத்தில் பின்வருமாறு அமைந்திருந்தது.

**அட்டவணை இல : 01 அரச துறை ஊழியர் படை - 2013**

| நிர்வாக மட்டம் | அனுமதியளிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி |
|---|---|---|
| தேசிய மட்டம் | 1,041,953 | 922,777 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 391,647 | 375,752 |
| **மொத்தம்** | **1,433,600** | **1,298,529** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.2 அரச துறையின் பதவியணி முகாமை - 2013

பொது மக்களுக்கு வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிவாய்ந்ததுமான அரச சேவையினை வழங்கும் நோக்கிலும் புதிய அரச கொள்கைகளுக்கு இணங்க பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கிலும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கு 2013 ஆம் ஆண்டில் போதியளவில் ஊழியர் எண்ணிக்கைப் பேணி வருவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

6/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க அரசாங்க சேவையிலுள்ள பதவிகள் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்பநிலை என நான்கு மட்டங்களைக் கொண்டதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த சேவை மட்டங்களுக்கு இணங்க அரசாங்கத் துறையின் பதவியணி வகைப்படுத்தல் அட்டவணை இல. 02 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல – 02 சேவை மட்டங்களின் அடிப்படையில் அரச துறை பதவியணி எண்ணிக்கை - 2013**

| நிர்வாக மட்டம் | சேவை மட்டம் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | சிரேஷ்ட நிலை | மூன்றாம் நலை | இரண்டாம் நிலை | ஆரம்ப நிலை | |
| தேசிய | 27,743 | 27,090 | 721,640 | 146,304 | 922,777 |
| மாகாண சபை | 13,681 | 15,313 | 236,589 | 60,873 | 326,456 |
| உள்ளூராட்சி மன்றங்கள் | 999 | 739 | 15,598 | 31,960 | 49,296 |
| **மொத்தம்** | **42,423** | **43,142** | **973,827** | **239,137** | 1,298,529 |
| **சதவீதம் %** | **3** | **3** | **75** | **19** | **100** |

முகாமைத்துவ மட்டத்திலான பொறுப்புக்களை வகிக்கும் பொறியியலாளர்கள், நிதிமன்ற, சட்ட, வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மொத்த ஊழியர் எண்ணிக்கையில் 3 சதவீதத்தைப் பிடித்துள்ளனர். மேற்பார்வைப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள நிறைவேற்று மட்டத்திற்கு உதவியாக அமையும் நிர்வாககம், திட்டமிடல், கணக்கீடு, வழிகாட்டல், வரி மற்றும் அமுலாக்கம் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் மூன்றாம் நிலை மட்டத்தினர் என்ற வகையில் மொத்த அரச துறையினரில் 3 சதவீத பங்களிப்பை வழங்குகின்றனர். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், தாதிமார், ஆசிரியர்கள், முப்படைகளின் படைவீரர்கள், பொலிஸ் கான்ஸ்டபிள்மார் போன்ற உத்தியோகத்தர்களைக் கொண்ட இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் மொத்த அரசாங்க ஊழயிர்களில் 75 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இதன் மூலம் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை நாடளாவிய ரீதியில் வழங்குவதற்காக ஆசிரியர்களும் தாதிமார்களும் நாட்டின் கிராமங்களை மையமாகக் கொண்ட சேவை வழங்கலுக்காகவும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகவும் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்களும் அதிகளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். மொத்த அரசாங்கத் துறையினதும் ஊழியர் எண்ணிக்கையில் 19 சதவீதம் சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் போன்ற ஆரம்ப நிலை உதவிச் சேவையாளர்களால் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

## 2.2.1 புதிய பதவிகளின் உருவாக்கம் - 2013

புதிய பதவிகளைப் புதிதாக உருவாக்கும் போது உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள், நாட்டின் நிதி நிலைமைகள், வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் என்பனவும் பதவிகளை உருவாக்குவதற்கான காலத்தின் தேவைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன. அரச துறைக்குப் புதிய பதவிகளை உருவாக்குவது தொடர்பில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மட்டத்தில் செய்யப்பட்ட வகைப்படுத்தல்கள் 2010-2013 இடைப்பட்ட காலத்திற்கான தகவல்களுடன் கீழே அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை - 03 புதிய பதவிகளின் உருவாக்கம்**

| நிறுவனம் | 2010 | | 2011 | | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) |
| அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | 1,923 | 36.3 | 2,893 | 73.3 | 38,386 | 78.1 | 15,315 | 77 |
| மாகாண சபைகள் | 2,811 | 53 | 523 | 13.2 | 8,572 | 17.4 | 3,093 | 16 |
| நியதிச்சட்ட சபைகள் | 568 | 10.7 | 534 | 13.5 | 2,2217 | 4.5 | 1,330 | 7 |
| **மொத்தம்** | **5,302** | **100** | **3,950** | **100** | **49,157** | **100** | **19,738** | **100** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

இந்த வகையில் 2013 ஆம் ஆண்டுக்காக உருவாக்கப்பட்ட பதவிகளில் 77 சதவீதமானவை அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் உரியவையாகும்.

## 2.2.2 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல் - 2013

2007.08.01 மற்றும் 2007.10.15 ஆந் திகதிய 36 மற்றும் 36 ( I ) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள் மூலம், 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள MN, MT, SL, PL ஆகிய சம்பளத் திட்டங்களுக்கு இணங்க உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறுகை/ பதவி விலகல்/ மரணம்/ சேவையைத் துறந்து செல்லல் போன்ற காரணங்களினால் அரசாங்க சேவையிலும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட மாகாண அரசாங்க சேவையிலும் உருவாகும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான/ நியமனம் செய்வதற்கான அதிகாரங்களை உரிய நிரல் அமைச்சின் செயலாளர்களுக்கும் மாகாணங்களின் பிரதம செயலாளர்களுக்கும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும். இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு உட்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொடர்ந்தும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறுவது அவசியமாகும். அதனால், சேவைத் தேவைப்பாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தி, 2013 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்டஅரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் 10,417 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் அனுமதி வழங்கியது.

**அட்டவணை இல - 04 பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கல் - 2013**

| நிறுவனம் | எண்ணிக்கை | சதவீதம்(%) |
|---|---|---|
| அமைச்சுக்கள் | 4,683 | 45 |
| திணைக்களங்கள் | 2,673 | 26 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 1,788 | 17 |
| நியதிச்சட்ட நிறுவனங்கள் | 1,273 | 12 |
| **மொத்தம்** | **10,417** | **100** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.2.3 பதவிகளை இல்லாதொழித்தல் மற்றும் பதவிப்பெயர்களைத் திருத்துதல்

அரச துறை பதவியணி முகாமையின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணி, நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குவதற்கும் புதிய பதவிகளை உருவாக்குவதற்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன்று. அரசாங்க நிறுவனங்களில் நிலவும் பயனுறுதியானதாகவோ காலத்துக்குப் பொருத்தமானதாகவோ இல்லாத பதவிகளை அடையாளம் கண்டு, உரிய நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன் அப்பதவிகளை இல்லாதொழித்தல், காலத்தின் தேவைகளுக்குப் பொருத்தமான முறையில் பதவிப் பெயர்களைத் திருத்துதல், கடமைகளின் தன்மைக்கு ஏற்ப தற்போதுள்ள பதவிகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளும் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான பணிகளில் அடங்கும். இப்பணிகளை மேற்கொள்வதற்காகத் திணைக்களத்திடமுள்ள தரவுத் தொகுதியும் ஆய்வுப் பிரிவின் ஊழியர் குழாமும் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன. 2010 - 2013 காலப் பகுதியில் அரச துறையிலிருந்து இல்லாதொழிக்கப்பட்ட பதவிகள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை இல -05 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை இல - 05 பதவிகளை இல்லாதொழித்தல்**

| நிறுவனம் | இல்லாதொழிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 |
| அமைச்சுக்கள் | 12 | 32 | 95 | 179 |
| திணைக்களங்கள் | 174 | 512 | 1853 | 494 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 329 | 62 | 66 | 1 |
| நியதிச்சட்ட நிறுவனங்கள் | 24 | 66 | 8 | 33 |
| **மொத்தம்** | **539** | **672** | **2022** | **707** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.2.4 செயற்திட்டங்களின் பதவியணிகளுக்கு அனுமதி வழங்கலும் சம்பள முகாமையும்

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் திட்டமிடப்பட்ட காலப் பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பதவியணிகளுக்கு அனுமதி வழங்குதல், அப்பதவிகளுக்கான சம்பளங்களைத் தீர்மானித்தல் என்பன 2007.04.05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் இத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் இச்செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம், செயற்திட்ட முகாமை மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் என்பன இத்திணைக்களத்திற்குச் சிறந்த முறையில் ஒத்துழைப்பு நல்கின.

**அட்டவணை இல - 06 செயற்திட்டங்களின் பதவியணிகளுக்கு அனுமதி வழங்குதல் - 2013**

| தொ. இல. | செயற்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தேசிய வீதி வலையமைப்பை மண்சரிவு அபாயங்களிலிருந்து பாதுகாப்பதற்கான செயற்திட்டம் | 12 |
| 2. | உள்நாட்டு வங்கிகள் மூலம் நிதியிடப்படும் வீதிச் செயற்திட்டங்கள் | 185 |
| 3. | விசேட செயற்திட்ட முகாமை அலகு (முன்னர் ஜப்பானிய உதவியின் அடிப்படையில் இயங்கிய செயற்திட்ட முகாமை அலகு) | 22 |
| 4. | கொழும்பு தொழிற்பயிற்சி நிறுவனத்தை உருவாக்குதல் மற்றும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியை மேம்படுத்துவதற்கான செய திட்டம் | 09 |
| 5. | கண்டி நகர அழுக்கு நீர் செயற்திட்டம் | 26 |
| 6. | கொழும்பு நீர்வழங்கல் சேவை மேம்பாட்டுச் செயற்திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி பெறும்) | 96 |
| 7. | கிளிநொச்சி நீர்வழங்கல் திட்ட மறுசீரமைப்பு | 17 |
| 8. | அநுராதபுரம் -வடக்கு நீர் விநியோகச் செயற்திட்டம் | 10 |
| 9. | உலர் வலய நகர நீர்வழங்கல் மற்றும் துப்புரவுச் செயற்திட்டம் | 12 |
| 10. | பதுளை, ஹாலிஎலை மற்றும் அல்லை நீர் விநியோகச் செயற்திட்டம் | 29 |
| 11. | மகியங்கனை நீர் விநியோகச் செயற்திட்டம் | 12 |
| 12. | யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் துப்புரவுச் செயற்திட்டம் | 29 |
| 13. | பாரிய கொழுப்பும் கழிவு நீர் முகாமைச் செயற்திட்டம் | 04 |

| | | |
|---|---|---|
| 14. | விசல் இரத்தினபுரி நீர் விநியோகச் செயற்திட்டம் | 30 |
| 15. | கிரம - கட்டுவானை நீர் விநியோகச் செயற்திட்டம் | 13 |
| 16. | மொனராகலை - புத்தளை நீர் விநியோகச் செயற்திட்டம் | 25 |
| 17. | கம்பஹா - அத்தனகல்லை மற்றும் மினுவாங்கொடை நீர் விநியோகச் செயற்திட்டம் | 38 |
| 18. | விசல் குருநாகல் நீர்ப்பாசனச் செயற்திட்டம் | 06 |
| 19. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத் துறை நிகழ்ச்சித்திட்டச் செயற்திட்டம் | 03 |
| 20. | நகரப் புத்துரளிப்புச் செயற்திட்டம் - கொழும்பு நகரம் | 217 |
| 21. | இலங்கை சுனாமிக்குப் பின்னரான கிழக்கு மாகாண பங்கேற்றல் கரையோர மீள் உருவாக்க, நிலைத்துநிற்கும் முகாமைச் செயற்திட்டம் | 03 |
| 22. | கொழும்பு தலைநகரச் சுற்றுப்புற நகர அபிவிருத்திச் செயற்திட்டம் | 01 |
| 23. | பாரிய கொழும்பு போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் | 12 |
| 24. | 2013-2017 கல்வி துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி நிகழ்ச்சிட்டம் | 11 |
| 25. | புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்திசெய்வதற்கான வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம் | 18 |
| 26. | காலி மகமோதரை மகப்பேற்று வைத்தியசாலை நிர்மாணச்செயற்திட்டம் | 08 |
| 27. | குப்பைகள் அகற்றல் செயற்திட்டம் | 37 |
| 28. | தொம்பே துப்புரவு குப்பை நிலச் செயற்திட்டம் | 10 |
| 29. | பாரிய கொழுப்பும் கழிவு நீர் முகாமைச் செயற்திட்டம் | 14 |
| 30. | திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுக நிர்மாணச் செயற்திட்டம் | 03 |
| 31. | மீன்பிடித் துறைமுகங்களையும் நங்கூரமிடம் இடங்களையும் அபிவிருத்திச் செய்யும் செயற்திட்டம் | 15 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.4 மாகாண சபை பதவியணி மீளாய்வு

அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் மூலம் அமைக்கப்பட்ட மாகாண சபைகளின் ஊடாகப் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரம், பயனுறுதி, வினைத்திறன் என்பவற்றை உறுதிசெய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டில் பதவியணி தொடர்பான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு போதியளவு ஊழியர் எண்ணிக்கைகள் தீர்மானிக்கப்பட்டன. எவ்வாறாயினும் புதிய நிறுவனங்களை உருவாக்குதல் சேவை வழங்கல் விரிவடைதல் என்பவற்றின் காரணமாக 2013 ஆம் ஆண்டில் மேலும் புதிய பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. புதிதாக தாபிக்கப்பட்ட வடமாகாண சபைக்கு அவசியமான பதவியணி தீர்மானிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை சபைச் செயலகத்திற்கான புதிய பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 3. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் அரசாங்கத் துறையின் சம்பளங்கள் மற்றும் மிகையூதியங்கள், ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் வேறு வேதனங்களின் முகாமை மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இச்செயற்பாட்டின் போது தேசிய சம்பள ஆணைக்குழு, அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்பவற்றின் அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் கவனத்தில் எடுத்து தீர்மானங்களை வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சம்பளங்கள், ஊதியங்கள் தொடர்பான நடைமுறைச் சிக்கல்கள் எழும் சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் விளக்கம் கோரப்படும் சந்தர்ப்பங்களில் அவசியமான அறிவுறுத்தல்களை வழங்கும் பணியும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டின் 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதற்கான திருத்தங்களுக்கும் இணங்கிய வகையில் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க நியதிச் சட்ட நிறுவனங்களின் மீள்கட்டமைப்புச் செயற்பாடுளையும் சம்பளங்களையும் கொடுப்பனவுகளையும் தீர்மானிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றுடன் தொடர்புடைய வகையில் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன.

**அட்டணை இல - 07 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை - 2013**

| சுற்றறிக்கை இலக்கமும் திகதியும் | விடயம் |
|---|---|
| முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2013 – 2013.11.15 | அரச கூட்டுத்தாபனங்களினதும் அரசுக்கு முழுமையாகச் சொந்தமான கம்பனிகளினதும் ஊழியர்களுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான மிகையூதியம் வழங்குதல் |
| முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கை இல 01/2013(i) – 2013.12.09 | அரச கூட்டுத்தாபனங்களினதும் அரசுக்கு முழுமையாகச் சொந்தமான கம்பனிகளினதும் ஊழியர்களுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான மிகையூதியம் வழங்குதல் |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# 4. ஆய்வுச் செயற்பாடுகள், தகவல் மற்றும் தரவுத் தொகுதி

## 4.1 ஆய்வுச் செயற்பாடுகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில், அரசாங்கத் துறை பதவியணி தொடர்பான மறுசீரமைப்புக்களை அறிமுகஞ் செய்தல், அரசாங்க நிறுவனங்களை மீள்கட்டமைத்தல், போதிய பதவியணியைப் பேணி வருதல், அரச துறை பதவியணி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகளையும் தரநியமங்களையும் உருவாக்குதல், சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய ஊதியங்கள் தொடர்பான ஆய்வுகளை நடாத்தி அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல், தற்போதைய அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமான முறையில் அரச துறையின் பல்வேறு சேவைகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் சேவை நிபந்தனைகளையும் மீளாய்வு செய்யும் போது தேவையான அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் முன்வைத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் இத்திணைக்களம் ஏனைய நிறுவனங்களுடன் நெருக்கமான முறையில் தொழிற்படுகின்றது.

இச்செயற்பாடுகளைத் தாமதமின்றி, சரியான முறையில் மேற்கொள்வதற்குத் திணைக்களத்திடம் வினைத்திறன்மிக்க ஆய்வுப் பிரிவு ஒன்று காணப்படுவது அத்தியவசியமானதாகும். திணைக்களத்தின் பணிக்கடமைகளைப் பயனுறுதிவாய்ந்த முறையில் மேற்கொள்வதற்கு அவசியமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காகத் தகவல்களைச் சேகரித்தல், அத்தகவல்களைப் பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் என்பன ஆய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்புக்களாகும். இதற்குத் தேவையான புலன்விசாரணைகளை/ ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ஆய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் உரிய நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்டு தகவல் சேகரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக திணைக்களத்தின் ஆய்வுப் பிரிவின் கொள்ளளவை விரிவாக்க வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்காகத் திறமையான உத்தியோகத்தர்களை அடையாளம் கண்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.2 தகவல் மற்றும் தரவுத் தொகுதி

அரசாங்கத் துறையின் மனித வளங்கள் தொடர்பான சரியான தரவு மற்றும் தகவல் தொகுதியொன்றைப் பேணி வருவது, கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் போது அதி முக்கியத்துவம் பெறுகின்றது. அரச துறை பதவியணி மற்றும் சம்பள முகாமை மற்றும் ஆலோசனை தொடர்பான முன்னணி அரச நிறுவனம் என்ற வகையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அதிக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க பயனுறுதிவாய்ந்த கணனித் தரவுத்தொகுதியொன்றின் தேவையைச் சரியான முறையில் அடையாளம் கண்டு 2012 - 2013 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகளின் அனுமதிக்கப்பட்ட மற்றும் உண்மையாகக் காணப்படும் ஊழியர் பதவியணி எண்ணிக்கைகள் அடங்கிய தரவுத் தொகுதி தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றது.

அரசாங்கத் துறையின் மனித வளங்கள் தொடர்பான சரியான புள்ளிவிபரவியல் தகவல்களை இத்தரவுத் தளத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதற்கிணங்க, சம்பளங்கள், சேவைகள், வகுதிகள் போன்ற பதவியணி வகைப்படுத்தல்கள் தொடர்பாகச் செய்யப்படும் சரியான தகவல் அறிக்கைகளைத் தேவையான சந்தர்ப்பங்களில் இத்தரவுத் தளத்திலிருந்து இலகுவாகப் பெற்றுக்

கொள்ளக்கூடிய விதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிகள் பாரியளவில் இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன் வழங்கப்படும் தரவுகளின் அச்சொட்டான தன்மையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இத்தரவுத் தொகுதியில் அடங்கியுள்ள தகவல்களை இற்றைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 4.3 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்.

அரசாங்கத் துறையின் தாபனச் செயற்பாடுகள், சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் போன்ற திணைக்களத்தின் விடயப்பரப்பில் அடங்கும் விடயங்கள் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை வழங்குவது இத்திணைக்களத்தின் பிரதான பணிக் கடமைகளில் ஒன்றாகும். 2013 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அவை உள்ளடங்கும் துறைகள் தொடர்பான தகவல்கள் அட்டவணை இல 09 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை இல - 08 அமைச்சரவை விஞ்ஞாபன அவதானங்களின் வகைப்படுத்தல்**

| தொ. இல. | விடயம்/துறை | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பதவிகளுக்கு நியமித்தல் | 118 |
| 02 | சேவையை நீடித்தல் | 35 |
| 03 | புதிய பதவிகளை உருவாக்குதல் | 14 |
| 04 | ஊதியம் | 70 |
| 05 | சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் | 38 |
| 06 | ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் | 08 |
| 07 | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு | 110 |
| 08 | ஏனையவை | 106 |
| **மொத்தம்** | | 499 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2013 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் வழங்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களில், பதவிகளுக்கான நியமனங்கள், சேவையை நீடித்தல், வேதனங்கள் என்பன தொடர்பான விடயங்கள் முக்கியமானவையாகக் காணப்பட்டன. அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்களை வழங்கியதற்கு மேலதிகமாக தினசரி நடைபெறும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உபகுழுக் கூட்டங்களிலும் திணைக்களம் பங்கேற்றது. 2003 முதல் 2013 வரையான காலப் பகுதியில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை இல 10 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை இல - 09 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்**

| வருடம் | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை | 863 | 562 | 605 | 820 | 780 | 750 | 1272 | 598 | 1019 | 399 | 499 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 4.4 குழுக்களுக்கான பிரதிநிதித்துவம், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், தொடர்பாடல்

அபிவிருத்திக் குறிக்கோள்களையும் நிறுவனக் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் செயற்பாட்டின் போது பின்வரும் மாநாடுகளிலும் கலந்துரையாடல்களிலும் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிதி, திட்டமிடல் அமைச்சையும் திறைசேரியின் செயலாளரையும் பிரதிநிதித்துவம் செய்து செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்தனர்.

- தாபனச் செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உபகுழு
- அமைச்சரவையினால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் குழு
- பொதுக் கணக்குகள் குழு (COPA)
- மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள் மாநாடு
- ஆளுநர்கள் மாநாடு
- மாகாண முதலமைச்சர்கள் மாநாடு
- மாகாண முதன்மைச் செயலாளர்கள் மாநாடு
- தேசிய சம்பள ஆணைக்குழுக் கலந்துரையாடல்கள்
- செயற்பதிட்ட முன்னேற்ற மீளாய்வுக் குழுக்கள்
- நியதிச் சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்
- பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

மேலும், பல்வேறு நிறுனவனங்களின் கோரிக்கைக்கு இணங்க நேர்முகப் பரீட்சைச் சபைகளுக்கான அங்கத்தவர்களாகவும் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். மேலும், அரசாங்க நிறுவனங்களின் பதவியணி முரண்பாடுகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுடன் அடிக்கடி பேச்வார்த்தைகள் நடாத்தப்படுகின்றன. இவ்வாறு, அரச துறையின் வினைத்திறன்மிக்க மனித வள முகாமைத்துவத்திற்கான நடைமுறையொன்றை உருவாக்கும் நோக்கில் பயனுறுதிமிக்க தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# 5. தாபனப் பிரிவு

திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதி மிக்க முறையிலும் மேற்கோள்வதில் திணைக்கள உத்தியோகத்தர்களின் தொழிற் திருப்தியை உயர்ந்த மட்டத்தில் பேணி வருவது மிகவும் முக்கியமானதாகும். திணைக்களத்தின் பௌதிகச் சூழலை, தொழிற் திருப்தியை மேம்படுத்தக்கூடிய நட்புறவான அலுவலகச் சூழலாக மாற்றியமைப்பதற்கும் பயனுறுதிமிக்க ஒரு குழுவாகச் செயற்படுவதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் தாபனப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டில் திணைக்களத்திடமிருந்த மனித மற்றும் பௌதிக வளங்களை உச்ச அளவில் வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் பயன்படுத்தியதன் மூலம் திணைக்களத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் சேவைகளைத் தடங்கலின்றி மேற்கொள்ள முடிந்தது. 2013.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான முழு ஊழியர் குழாத்தினதும் தகவல்கள் அட்டவணை இல. 11 மூலம் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இல - 10 ஊழியர் குழாம் பற்றிய தகவல்கள் 2013.12.31 இல் உள்ளவாறு**

| தொ இல | பதவி | அனுமதி. எண்ணிக்கை | தற். எண்ணிகை | வெற்றிடம்/ மேலதிகம் |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | 00 |
| 02 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 02 | 01 | 01 |
| 03 | பணிப்பாளர் | 07 | 02 | 05 |
| 04 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் | 10 | 07 | 03 |
| 05 | கணக்காளர் | 01 | 00 | 01 |
| 06 | உதவிப் பணிப்பாளர் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை) | 01 | 00 | 01 |
| 07 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 08 | மொழிபெயர்ப்பாளர் | 01 | 01 | 00 |
| 09 | ஆராய்ச்சி உதவியாளர் | 07 | 05 | 02 |
| 10 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | 00 |
| 11 | அபிவிருத்திச் உத்தியோகத்தர் | 02 | 03 | -01 |
| 12 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 29 | 24 | 05 |
| 13 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 03 | 01 | 02 |
| 14 | சாரதி | 06 | 05 | 01 |
| 15 | அலுவலக உதவியாளர் | 07 | 07 | 00 |
| | **மொத்தம்** | 79 | 59 | 20 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2012.12.31 இல் திணைக்களத்தில் சேவையில் இருந்த பதவியணியினர் பற்றிய தகவல்கள் பட்டியல் இல 01 இல் தரப்பட்டுள்ளன.

**பட்டியல் - 01 பதவியணி 2013.12.31 இல் உள்ளவாறானது**

| தொ. இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திருமதி என். கொடகந்த | பணிப்பாளர் நாயகம் |
| 02 | திரு.ஏ.ஆர்.உடுவாவல | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 03 | திரு.எஸ்.ஆர்.டபிள்யு.எம்.ஆர்.பீ சத்குமார | பணிப்பாளர் |
| 04 | திரு லலித் ஆனந்த | பணிப்பாளர் |
| 05 | திருமதி எம்.கே.எஸ். ஜயசேன | பிரதிப் பணிப்பாளர் |
| 06 | திருமதி எஸ்.என். அத்தநாயக | பிரதிப் பணிப்பாளர் |
| 07 | திரு.எம்.ஏ திரு. கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 08 | செல்வி சாமிகா மதுவந்தி | உதவிப் பணிப்பாளர் |
| 09 | திரு.டபிள்யு.எச்.ஜீ.ஜீ கோசல | உதவிப் பணிப்பாளர் |
| 10 | திருமதி டபிள்யு.பீ. செவ்வந்தி | உதவிப் பணிப்பாளர் |
| 11 | திருமதி டபிள்யு.டி. சேபாலிகா | உதவிப் பணிப்பாளர் |
| 12 | திருமதி ஏ. ஆர்.பீ. தயானி ராஜபக்ஷ | நிர்வாக உத்தியோகத்தர் |
| 13 | திருமதி பீ.டி.டி. சமரசேகர | மொழிபெயர்ப்பாளர் |
| 14 | திரு.எம்.டபிள்யு. ஜயந்த | ஆராய்ச்சி உதவியாளர் |
| 15 | திரு. ஆர்.கே.ஏ. கிரிஷாந்த | ஆராய்ச்சி உதவியாளர் |
| 16 | திரு. எஸ்.எம்.டி. சமரவீர | ஆராய்ச்சி உதவியாளர் |
| 17 | திருமதி எம்.எம்.ஏ.என். மல்போறு | ஆராய்ச்சி உதவியாளர் |
| 18 | திரு.பி.எம் சரத் | ஆராய்ச்சி உதவியாளர் |
| 19 | திரு எம்.பீ.எஸ். சல்காது | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| 20 | செல்வி ஈ.என்.ரணசிங்ஹ | அபிவிருத்திச் உத்தியோகத்தர் |
| 21 | திருமதி எஸ்.எஸ். அல்பிடியகே | அபிவிருத்திச் உத்தியோகத்தர் |
| 22 | செல்வி எச்.எஸ்.ஏ. ஹேனேபொல | அபிவிருத்திச் உத்தியோகத்தர் |
| 23 | திருமதி டபிள்யு.ரீ.எம். பிரியந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 24 | திருமதி வை.என். களுஆரச்சி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 25 | திருமதி கே.பீ பத்மகாந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 26 | திருமதி எம்.எம். அளுத்கே | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 27 | திருமதி எம்.டி.ஆர் ரஞ்சனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 28 | திருமதி ஏ.எம்.எம். சயாமலீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 29 | செல்வி ஜீ.என்.எச். அபயவர்தன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 30 | திரு எம்.என்.எம். உஸாமா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 31 | திருமதி ஜே.ஏ.என் தேதுனு | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 32 | திருமதி எஸ்.எச்.எஸ். பவித்ரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 33 | செல்வி.கே.ஐ. பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 34 | திருமதி எஸ்.எஸ்.ஆர் செனெவிரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 35 | செல்வி எச்.எல். மங்கலிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 36 | திருமதி ஏ.எம். குணரத்ன மெனிகே | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 37 | திருமதி டி.பீ.எஸ். ஜயசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 38 | திருமதி ஏ.எம்.எஸ்.எஸ்.கே. அரம்பத் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 39 | திருமதி டபிள்யு.ஜே. பேருசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 40 | செல்வி ஆர். ரமணி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 41 | திரு. ஆர்.ஏ.விஜேசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 42 | திரு. எஸ்.எஸ. பியன்வில | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 43 | திரு. ஏ.ஐ.எல்.சிரிசேன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 44 | செல்வி எஸ.ஏ.ஜீ.டி.என். ஜயகொடி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 45 | திரு. ஆர்.டபிள்யு.ஏ.எச். ராஜசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 46 | திருமதி எச்.யூ.ரத்நாயக | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 47 | செல்வி ஹிரந்தி தீகல | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| 48 | திரு.எம்.கே. யஸவர்தன | சாரதி |
| 49 | திரு. ரீ.கே.சாம் நிஷாந்த | சாரதி |
| 50 | திரு. கே.பி. சிரிசோம | சாரதி |
| 51 | திரு.ஜீ.பீ.டி.சீ.பீ.குணரத்ன | சாரதி |
| 52 | திரு. டி.பீ.ஜே.பீ.தசநாயக | சாரதி |
| 53 | திரு.டபிள்யு.ஏ.ஹேமசிரி | அலுவலக உதவியாளர் |
| 54 | திரு.ரீ.ஜீ. ஆனந்த | அலுவலக உதவியாளர் |
| 55 | திரு.ஏ.என்.சீ. டி அல்விஸ் | அலுவலக உதவியாளர் |
| 56 | திரு.டபிள்யு. நந்தன | அலுவலக உதவியாளர் |
| 57 | திரு சுசந்த பிரபாத் | அலுவலக உதவியாளர் |
| 58 | திரு. பீ.ஏ திலகசிரி அப்புஹாமி | அலுவலக உதவியாளர் |
| 59 | திரு. கமகே நிமல் | அலுவலக உதவியாளர் |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.1 பால் வேறுபாடு மற்றும் வயது அடிப்படையில் ஊழியர் வகையீடு

**அட்டவணை இல - 11 பால் வேறுபாடு மற்றும் வயது அடிப்படையில் ஊழியர் வகையீடு**

| தொ. இல | வயதுப் பிரிவு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 01 | 25 இற்கு குறைந்த | 00 | 00 |
| 02 | 26-35 | 10 | 04 |
| 03 | 36-45 | 13 | 13 |
| 04 | 46-50 | 04 | 05 |
| 05 | 51-55 | 06 | 03 |
| 06 | 55 இற்கு மேற்பட்ட | 00 | 01 |
| மொத்தம் | | 33 | 26 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.2 இடமாற்றங்கள்

அரசாங்க சேவையின் பொதுவான நடைமுறைகளுக்கு இணங்க திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, 2013 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து 18 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்ற அதேவேளை வேறு பதவிகளுக்கு நியமனம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 01 ஆகும்.

**பட்டியல் - 02 2013 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்**

| தொ. இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. அசங்க தயாரத்ன | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2013.05.13 |
| 02 | திருமதி ஆர்.கே.ஜீ.டி.கே.விஜேசிங்ஹ | பணிப்பாளர் | 2013.03.04 |
| 03 | திரு. ஜீ.டி.அநுர பியபந்து | பணிப்பாளர் | 2013.09.23 |
| 04 | திரு.கே.ஜீ.பிரதீப் புஷ்பகுமார | பணிப்பாளர் | 2013.12.06 |
| 05 | திரு.கே.ஆர்.பரணவிதான | ஆராய்ச்சி உதவியாளர் | 2013.06.18 |
| 06 | திருமதி ஏ.கே.பீ.நில்மினி | ஆராய்ச்சி உதவியாளர் | 2013.08.16 |
| 07 | திருமதி டபிள்யு.எஸ்.எஸ்.புஷ்பகாந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.01 |
| 08 | திரு. ஏ.ஆர்.சஹிதீன் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.01 |
| 09 | திருமதி எச்.யூ.என். பொன்சேகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.01 |
| 10 | செல்வி ஆர். விஜேசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.01 |
| 11 | திருமதி எச்.டி.எல். குமுதினி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.01 |
| 12 | திருமதி டபிள்யு.எஸ்.எஸ்.பெனான்டோ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.01 |
| 13 | திரு. டபிள்யு.எஸ்.கே. மாலகம்மன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.01 |
| 14 | திரு. ஜீ.எஸ்.ஆர்.ஏகநாயக | அலுவல உதவியாளர் சேவை | 2013.01.04 |
| 15 | திருமதி டபிள்யு.ஜீ.ஜீ.ஏ.டி.எம்.டயஸ் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.15 |
| 16 | திருமதி ஜீ.ஜீ.என்.எஸ். ராஜபக்ஷ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.15 |
| 17 | திரு. பீ.எஸ்.ஏ.டபிள்யு.சதரசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.24 |
| 18 | திருமதி எஸ்.டி.என்.எல். தேவப்பிரிய | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.05.08 |
| 19 | செல்வி ஜீ.எல்.ஆர்.வித்யாலங்கார | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.11.05 |
| 20 | திரு.ஆர்.சீ. கருணாரத்ன | சாரதி | 2013.05.23 |
| 21 | திரு. ஜோதிவங்ச | சாரதி | 2013.10.23 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

**பட்டியல் - 03 வேறு பதவிகளுக்கு நியமனம் பெற்ற அலுவலர்கள்**

| தொ. இல. | பெயர் | பதவி | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | செல்வி கே.ரீ.பீ.ரன்சீமலீ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.07.12 |

2013 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்துக்கு வந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 21 ஆகும். அவர்கள் பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவத்தைக் கொண்டவர்களாவர்.

பட்டியல் - 04 2013 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

| தொ. இல. | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. கே. ஆர். உடுவாவல | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2013.05.06 |
| 02 | திரு. லலித் ஆனந்த | பணிப்பாளர் | 2013.03.06 |
| 03 | திருமதி டபிள்யு.டி. சேபாலிகா | உதவிப் பணிப்பாளர் | 2013.06.03 |
| 04 | செல்வி பீ.சாமிகா மதுவந்தி | உதவிப் பணிப்பாளர் | 2013.06.28 |
| 05 | திருமதி ஏ.எம். குணரத்ன மெனிகே | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.02 |
| 06 | திருமதி டி.பீ.எஸ். ஜயசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.02 |
| 07 | திருமதி ஏ.எம்.எஸ்.எஸ்.கே. அரம்பத் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.09 |
| 08 | திருமதி டபிள்யு.ஜே. பேருசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.15 |
| 09 | செல்வி ஆர். ரமணி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.02.14 |
| 10 | திரு. ஆர்.ஏ.விஜேசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.02.28 |
| 11 | திரு. எஸ்.எஸ. பியன்வில | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.02 |
| 12 | திருமதி எச்.யூ.ரத்நாயக | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.02 |
| 13 | செல்வி ஏ.ஐ.எல். சிறிசேன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.04.24 |
| 14 | திரு. எஸ்.எஸ. பியன்வில | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.05.07 |
| 15 | திருமதி எஸ்.டி.என்.எல். தேவப்பிரிய | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.02 |
| 16 | செல்வி ஜீ.எல்.ஆர்.வித்யாலங்கார | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2013.01.02 |
| 17 | திரு.ஜீ.பீ.டி.சீ.பீ.குணரத்ன | சாரதி | 2013.01.02 |
| 18 | திரு. டி.எம்.ஜே.பி.தசநாயக | சாரதி | 2013.04.01 |
| 19 | திரு. ஜோதிவங்ச | சாரதி | 2013.10.03 |
| 20 | திரு. கே.பி. சிறிசோம | சாரதி | 2013.05.27 |
| 21 | திரு. பீ.ஏ திலகசிறி அப்புஹாமி | அலுவல உதவியாளர் சேவை | 2013.01.02 |
| 22 | திரு. ஜீ.நிமல் கமகே | அலுவல உதவியாளர் சேவை | 2013.03.28 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 5.3 பயிற்சி நிகழ்ச்சிகள்

### 5.3.1 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சிகளைத் திட்டமிட்ட அடிப்படையில் நடாத்தும் நோக்கில் திணைக்களத்திற்காக வருடாந்த பயிற்சித் திட்டமொன்று தயாரிக்கப்படும். இந்த வருடாந்த பயிற்சித் திட்டத்தைத் தயாரிக்கும் போது திணைக்கள உத்தியோகத்தர்களின் தேவைகளும் திணைக்களத்திடம் ஒப்படைக்கபட்டுள்ள பொறுப்புக்களும் கவனத்தில் எடுக்கப்படும். அதனடிப்படையில், 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிற்சிகள் அட்டவணை 13 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இல - 12 பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றமை**

| தொ இல. | துறை | பயிற்சி நிறுவனம் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | தமிழ் டிப்ளோமா பாடநெறி | களனிப் பல்கலைக்கழகம் | 01 |
| 02 | நிதிப் பொருளியல் பட்டப்பின் பட்டம் | கொழும்புப் பல்கலைக்கழகம் | 01 |
| 03 | உயர் கணனிப் பாடநெறி | அரசாங்க சேவை பயிற்சி நிறுவனம் | 01 |
| 04 | உபாயமுறைச் சிந்தனை மற்றும் உயர் நிறுவனச் செயலாற்றுகைக்கான குறிக்கோள்களை உருவாக்குதல் | இலங்கை மத்திய வங்கி | 02 |
| 05 | முகாமைத்துவ உதவியாளர் மற்றும் சம தரத்திலுள்ளவர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | 08 |
| 06 | தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | 21 |
| 07 | உயர் தொழில் பயனுறுதிக்கான வகிபாகம் | தேசிய தொழில் கல்வி நிறுவனம் | 02 |
| 08 | முழு ஊழியர் குழாத்துக்குமான பயிற்சிப் பாடநெறி | சந்ததன்ன ஸ்ரீலங்கா கல்வி நிறுவனம், நுவரெலியா | 60 |
| 09 | கணனி விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி | தேசிய வர்த்தக முகாமை நிறுவனம் | 01 |
| **மொத்தம்** | | | **97** |

### 5.3.2 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் அனுபவத்தையும் விடய அறிவையும் வளர்த்துக் கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனடிப்படையில் 13 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் கிட்டின.

அட்டவணை - 05 வெளிநாட்டுப் பயிற்சி - 2013

| தொ. இல. | பெயர் | பதவி | கிடைத்த பயிற்சி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.கே.ஜீ.பிரதீப் புஷ்பகுமார | பணிப்பாளர் | நிதி, திட்டமிடல் அமைச்சின் ஊழியர்களுக்கான பொருளியல் மற்றும் அரசாங்க கொள்கை தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சிப் பாடநெறி | சிங்கப்பூர் | 2013.03.18 - 2013.03.22 |
| 02 | திருமதி ஏ.கே.பீ.நில்மினி | ஆராய்ச்சி உதவியாளர் | ஆசிய நாடுகளின் சுங்க நிர்வாகம் தொடர்பான கருத்தரங்கு | சீனா | 2013.04.08 - 2013.04.28 |
| 03 | திரு. பீ.எம். சரத் | ஆராய்ச்சி உதவியாளர் | புலமைச் சொத்துரிமை மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு | சீனா | 2013.05.09 - 2013.06.05 |
| 04 | திருமதி எம்.எம்.ஏ.என். மல்போரு | ஆராய்ச்சி உதவியாளர் | புலமைச் சொத்துரிமை மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு | சீனா | 2013.05.07 - 2013.05.27 |
| 05 | திரு.ஏ.எம். அசங்க தயாரத்ன | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | முதலீடு மற்றும் பெறுகை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | சிங்கப்பூர் | 2013.05.06 - 2013.05.10 |
| 06 | திருமதி எஸ்.என் அத்தநாயக | உதவிப் பணிப்பாளர் | நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான மாநாடு | சீனா | 2013.06.08 - 2013.06.28 |
| 07 | செல்வி டபிள்யு.பீ.செவ்வந்தி | உதவிப் பணிப்பாளர் | பொருளாதார அபிவிருத்திப் போக்குகள் மற்றும் நிலைபேற்றுத்தன்மை தொடர்பான மாநாடு | சீனா | 2013.08.13 - 2013.09.02 |
| 08 | திரு. லலித் ஆனந்த | பணிப்பாளர் | சர்வதேச அரச வர்த்தக மற்றும் பொருளாதாரத் தகவல் சேகரிப்பு தொடர்பான மாநாடு | சீனா | 2013.08.21 - 2013.09.01 |
| 09 | திரு.டபிள்யு.எச்.ஜீ.ஜீ.கோசல | உதவிப் பணிப்பாளர் | வலயச் செயற்பாட்டு ஏற்பாட்டுத் தொகுதி தொடர்பான கருத்தரங்கு | சீனா | 2013.08.27 - 2013.09.16 |
| 10 | திருமதி என்.கொடகந்த | பணிப்பாளர் நாயகம் | நிதி, திட்டமிடல் அமைச்சின் ஊழியர்களுக்கான பொருளியல் மற்றும் அரசாங்க கொள்கை தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சிப் பாடநெறி | சிங்கப்பூர் | 2013.07.01 - 2013.07.05 |
| 11 | திருமதி எம்.கே.எஸ்.ஜயசேன | உதவிப் பணிப்பாளர் | நிதி, திட்டமிடல் அமைச்சின் | சிங்கப்பூர் | 2013.07.01 - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஊழியர்களுக்கான பொருளியல் மற்றும் அரசாங்க கொள்கை தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சிப் பாடநெறி | | 2013.07.05 |
| 12 | திரு.எம்.ஏ. கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் | நிதி, திட்டமிடல் அமைச்சின் ஊழியர்களுக்கான பொருளியல் மற்றும் அரசாங்க கொள்கை தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சிப் பாடநெறி | சிங்கப்பூர் | 2013.07.01 - 2013.07.05 |
| 13 | திரு. லலித் ஆனந்த | பணிப்பாளர் | நிதி, திட்டமிடல் அமைச்சின் ஊழியர்களுக்கான பொருளியல் மற்றும் அரசாங்க கொள்கை தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சிப் பாடநெறி | சிங்கப்பூர் | 2013.07.01 - 2013.07.05 |
| 14 | திருமதி எஸ்.என் அத்தநாயக | உதவிப் பணிப்பாளர் | அரசாங்க நிர்வாக மற்றும் நிலைமாறல் முகாமை | சிங்கப்பூர் | 2013.07. 15 - 2013.07.19 |
| 15 | செல்வி டபிள்யு.பீ.செவ்வந்தி | உதவிப் பணிப்பாளர் | அரசாங்க நிர்வாக மற்றும் நிலைமாறல் முகாமை | சிங்கப்பூர் | 2013.07. 15 - 2013.07.19 |
| 16 | செல்வி பீ.சாமிகா மதுவந்தி | உதவிப் பணிப்பாளர் | அரசாங்க நிர்வாக மற்றும் நிலைமாறல் முகாமை அரச தலைமைத்துவ நிலையம் | சிங்கப்பூர் | 2013.06.29 - 2013.07.07 |
| 17 | திரு.டபிள்யு.எச்.ஜீ.ஜீ.கோசல | உதவிப் பணிப்பாளர் | அமைச்சின் நிறைவேற்றுத் தரத்தினருக்கான பயிற்சி நிகழ்ச்சி | சிங்கப்பூர் | 2013.07.27 - 2013.08.04 |
| 18 | செல்வி பீ.சாமிகா மதுவந்தி | உதவிப் பணிப்பாளர் | இலங்கை பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு | கொரியா | 2013.09.01 - 2013.09.14 |

## 5.4 வருடாந்த தபால்

2013 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு கிடைத்த மொத்தக் கடிதங்களின் எண்ணிக்கை 6320 ஆகும். இக்கடிதங்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றவையாக இருந்த அதேவேளை அரச நிறுவனங்களுக்குப் புதிய பதவிகளை உருவாக்குதல், வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் திணைக்களத்திடம் அனுமதி கோருதல், விளக்கங்கள் கோருதல், பொது நிர்வாகம் ஆகிய அவற்றில் முக்கியமாக இடம்பெற்றிருந்தன.

**அட்டவணை இல - 13 2013 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை**

| தொடர் இலக்கம் | **மாதம்** | கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஜனவரி | 605 |
| 02 | பெப்ரவரி | 561 |
| 03 | மார்ச் | 424 |
| 04 | ஏப்ரல் | 465 |
| 05 | மே | 480 |
| 06 | ஜூன் | 550 |
| 07 | ஜூலை | 533 |
| 08 | ஆகஸ்ட் | 505 |
| 09 | செப்டெம்பர் | 501 |
| 10 | ஒக்டோபர் | 495 |
| 11 | நவம்பர் | 408 |
| 12 | டிசம்பர் | 793 |
| | **மொத்தம்** | **6320** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# 6. நிதிப் பிரிவு

2013 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் மனித வள முகாமைச் செயற்திட்டத்திற்காக செலவுத் தலைப்பு 242 இன் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு ரூபா. 50,400,000/- ஆகக் காணப்பட்ட அதேவேளை உண்மையாக ஏற்பட்ட செலவுகள் ரூபா 36,268,168.16 ஆக அமைந்தது. அதனடிப்படையில் நோக்குகையில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 71 சதவீதத்தின் மூலம் திணைக்களத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து சிக்கனமான முறையில் செலவுகளை மேற்கொள்ள முடிந்தது. நிதி முன்னேற்ற அறிக்கை வருமாறு.

**அட்டவணை இல - 14 நிதி முன்னேற்ற அறிக்கை**

| செலவு விபரம் | | 2012 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட மானியம் (முடக்கி வைக்கப்பட்ட மானியங்களைத் தவிர) (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) | செலவின சதவீதம் % | அனுமதிக்கப்பட்ட மானியம் (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) | செலவினம் சதவீதம் (%) |
| **மீளெழும் செலவுகள்** | | **3,28,00,000.00** | **3,08,84,182.91** | 94 | **3,52,00,000.00** | **3,27,77,099.21** | **93** |
| தனிப்பட்ட வேதனாதிகள் | | 2,37,60,000.00 | 2,29,31,076.91 | 97 | 2,47,00,000.00 | 2,36,08,354.85 | 95 |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 1,61,50,000.00 | 1,53,58,040.70 | 95 | 1,70,00,000.00 | 1,525,9204.69 | 89 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலச் சம்பளம் | 715000.00 | 693128.46 | 97 | 700,000.00 | 8,18,713.66 | 1.16 |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 68,95,000.00 | 68,79,907.75 | 99 | 70,00,000.00 | 75,30,436.50 | 1.07 |
| **போக்குவரத்துச் செலவுகள்** | | **435000.00** | **4,01,557.72** | **92** | **10,00,000.00** | **8,93,691.18** | **89** |
| 1101 | உள்நாட்டு | 100000.00 | 77425.50 | 77 | 2,00,000.00 | 1,28,445.00 | 64 |
| 1102 | வெளிநாட்டு | 335000.00 | 324132.22 | 97 | 8,00,000.00 | 7,65,246.18 | 95 |
| வழங்கல்கள் | | 37,85,000.00 | 31,68,916.10 | 84 | 40,00,000.00 | 37,84,035.79 | 94 |
| 1201 | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 10,55,000.00 | 10,02,952.60 | 95 | 8,00,000.00 | 14,88,982.90 | 1.86 |
| 1202 | எரிபொருள் | 25,00,000.00 | 20,13,293.50 | 81 | 30,00,000.00 | 20,49,947.19 | 68 |
| 1203 | உணவு குடிபானங்கள் மற்றும் சீருடைகள் | 180000.00 | 152535.00 | 85 | 150,000.00 | 2,45,105.70 | 1.63 |
| 1205 | ஏனையவை | 50000.00 | 135.00 | 0 | 50000.00 | 0.00 | 0 |
| **பராமரிப்புச் செலவுகள்** | | **10,00,000.00** | **8,97,587.52** | **90** | **11,00,000.00** | **10,28,196.64** | **93** |
| 1301 | வாகனங்கள் | 8,30,000.00 | 8,18,278.12 | 99 | 8,00,000.00 | 8,77,795.12 | 1.09 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1302 | இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | 1,70,000.00 | 79,309.40 | 47 | 3,00,000.00 | 1,50,401.52 | 50 |
| **சேவைகள்** | | **30,70,000.00** | **28,95,020.96** | **94** | **35,00,000.00** | **26,56,612.75** | **75** |
| 1401 | போக்குவரத்து | 14,00,000.00 | 13,12,435.50 | 94 | 15,00,000.00 | 10,60,440.00 | 70 |
| 1402 | தபால், தொடர்பாடல் | 12,00,000.00 | 11,74,399.93 | 98 | 15,00,000.00 | 10,99,998.91 | 73 |
| 1405 | ஏனையவை | 4,70,000.00 | 4,08,185.53 | 87 | 5,00,000.00 | 4,96,173.84 | 99 |
| **மாற்றல்கள்** | | **7,50,000.00** | **7,01,285.29** | **95** | **9,00,000.00** | **8,06,208.00** | **89** |
| 1506 | அரசாங்க உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன்களுக்கான வட்டி | 7,50,000.00 | 7,01,285.29 | 94 | 9,00,000.00 | 8,06,208.00 | 89 |
| **மூலதனச் செலவுகள்** | | **14,50,000.00** | **8,62,278.85** | **59** | **1,52,00,000.00** | **34,91,068.95** | **22** |
| **மூலதனச் சொத்துக்களின் புனமைப்பும் மேம்பாடும்** | | **6,36,000.00** | **5,66,023.85** | **89** | **1,09,00,000.00** | **2,69,328.85** | **02** |
| 2001 | கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 36,000.00 | 35,140.06 | 98 | 1,00,00,000.00 | 0.00 | 0 |
| 2002 | இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | 1,00,000.00 | 77,564.00 | 78 | 4,00,000.00 | 18,654 | 4 |
| 2003 | வாகனங்கள் | 5,00,000.00 | 453319.79 | 91 | 5,00,000.00 | 2,50,674.85 | 50 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | | **1,53,000.00** | **96,995.00** | **63** | **35,00,000.00** | **27,28,436.10** | **77** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | **1,53,000.00** | **96,995.00** | 63 | 30,00,000.00 | 27,28,436.10 | 90 |
| 2103 | இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | - | - | - | 5,00,000.00 | 5,00,000.00 | 0 |
| **ஆற்றல் விருத்தி** | | **661000.00** | **1,99,260.00** | **30** | **8,00,000.00** | **4,93,304.00** | **61** |
| 2401 | பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி | 6,61,000.00 | 199260.00 | 30 | 8,00,000.00 | 4,93,304.00 | 61 |
| **இறுதி மொத்தம்** | | **3,42,50,000.00** | **31,857,723.35** | **93** | **5,04,00,000.00** | **3,62,68,168.16** | **71** |

மூலம் : கணக்குப் பிரிவு - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

**நிர்வாகக் கட்டமைப்பு**

**முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**




- துணைப் பணியாட் தொகுதி - தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர், அரச முகாத்துவ உதவியாளர், சாரதி, அலுவலக உதவியாளர்